ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

05.06.2025

1. கலியினிலும் அற்புதம் நிகழ்த்த
கந்தனே எந்தனை அவதாரமாக்கி
அழியாமை அருளும் ஞானியாய்
அருட்சோதி கலந்திட வகை செய்த வேலவா

2. வேலவா உமை போற்றி அரங்கனும்
வினவிடுவேன் அரங்கன் யானும்
காலமதில் விசுவாவசு விடை திங்கள்
கண்டுரைக்க சதுர் குருவார அருளாசி

3. ஆசிதனை அரங்கன் என் தொண்டு
அளவிலா மேம்பட உரைப்பேன்
ஆசிதந்து தொண்டருள் தொண்டராய்
ஆற்றல்பட தொண்டுக்குள் கலந்து

4. கலந்து யானே அற்புதம் படைப்பேன்
கண்டுரைக்க ஞானப்படைகளாக
வலம்வர இந்தப் பேருலகில்
வழிகாட்டி என் தொண்டர்கட்கு

5. தொண்டர்கட்கு சர்வ பலமாகவே
துணை நிற்பேன் அரங்கனும்
உண்டான பிரணவ குடிலில்
உண்மைபட இனிவரும் காலம்

6. காலமதில் வைகாசி திங்கள்
கணக்காய் ஆண்டு தோறும்
கோலமதாய் பூசமீன் வரும் நாளை
குருவரங்கன் எனக்கு விழாவாக

7. ஆகவே வள்ளல் பெருமானுக்கு
அணுகும் தைபூசம் போலே
செகதமதனில் அரங்கனுக்கும்
சீடர்கள் ஒன்றிணைந்து விழா எடுக்க

8. எடுக்கவே வருகின்ற காலம்
என் அருள் கடாட்சம் தானும்
தடையற மகா சக்தியாக இறங்கி
தரணியில் மாற்றங்கள் நிகழும்

9. நிகழும் பிரணவக் குடிலில்
நிலம் மக்கள் போற்றவே
மிகையான தருமபலமாகி
மேலான தொண்டர்கள் பெருகிட

10. பெருகிட ஞானவான்களாகவே
புண்ணியம் காத்திடும் தருமவான்களாக
பெருகியே ஞானயுக மாற்றம்
பெருமான் முருகப்பெருமான் அருள

11. அருள அரங்கனும் சோதியாய்
அருளமுதாய் ஆசியாய் இறங்கி
வரம்பல தந்து மீட்பேன் காப்பேன்
வழங்கிய அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி